

# Madurai Symposium

## Advancing Development

September 24-29, 2007

செய்தியறிக்கை

சப்டம்பர் 24, 2007

# மதுரை கூடலரங்கில் உலகளாவிய குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன

தானம் அறக்கட்டளையின் மதுரை கூடலரங்கம் 2007 நிகழ்வின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்ட 'தண்ணீரும் வாழ்க்கையும்' வளர்ச்சிக் குறும்பட விழா தமுக்கம் மைதானத்தில் நாளை தொடங்குகிறது. கனடா, மெக்சிகோ, இத்தாலி, ஈரான், அமெரிக்கா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், ஜப்பான், பிரான்ஸ், நேபாளம் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் ஏறக்குறைய 46 குறும்படங்கள் கலந்து கொண்டன. இவற்றுள் திரையிடலுக்காக பதினாறு படங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஈரானிய இயக்குநர் முகமது நமி இயக்கியுள்ள 'Women of Dorfak', அமெரிக்க இயக்குநர் கிறிஸ்டோபர் இயக்கியுள்ள 'Winnemem War Dance at Shasta Dam', கனடாவைச் சேர்ந்த பாஸ்கல் ஜெலினஸ் இயக்கிய 'The Water Bearer', இத்தாலியைச் சேர்ந்த பைஜான் ஸமன்பிரா இயக்கிய 'A Window facing the sun' ஆகிய குறும்படங்கள் நாளை திரையிடப்படவுள்ளன. கனடாவைச் சார்ந்த நீரியல் வல்லுநர் கமிலா டோவ் பேக்கர், குறும்படவிழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

செப்டம்பர் 26ஆம் நாள் தமிழகத்தைச் சார்ந்த படைப்பாளிகளின் குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன. லீனா மணிமேகலையின் 'A hole in the Bucket', சுகந்தகுமாரின் 'தேடல்', கார்த்திக்கின் 'தண்ணீர் தேசம்' மற்றும் நத்தானியேல் கோஸட், நிக்கோலசின் 'தண்ணீர் இனிப்பும் கசப்பும்' ஆகிய குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

செப்டம்பர் 27ஆம் நாள் பிற இந்தியக் குறும்படங்கள் ஒளிபரப்பாகவுள்ளது. அதில் சௌரவ் சாரங்கியின் 'Bhangon', பைஜீ டோப்போ மேகநாத்தின் 'The Story of Water', தேவி பிரசாத் மிஸ்ராவின் 'No Shit, Please', அமித் சங்கரின் 'Faecal Attraction' ஆகிய படங்கள் திரையிடப்படவுள்ளன.

செப்டம்பர் 28ஆம் நாள் இத்தாலியைச் சார்ந்த பைஜான் ஸமன்பிரா இயக்கிய 'White Gold' மற்றும் மாசிமில்லியானோ டிராயனி இயக்கிய 'The Deserts Voice', பிலிப்பைன்சைச் சார்ந்த யூயெஸ் சடுரை மற்றும் மிரியம் சிஸ்கர் இயக்கிய 'Ganga from the Ground up', கனடாவைச் சார்ந்த ஜோசப் விசிஸ்கோவிச் இயக்கிய 'The Power of Water' ஆகிய படங்கள் திரையிடப்படவுள்ளன.

திரையிடப்படும் இந்தியப் படங்களிலிருந்து பரிசுக்குரியவை நீரியல் வல்லுநர்கள், மக்கள் தலைவர்கள், இதழாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்டோபர் 2ஆம் நாள் தானம் அறக்கட்டளையின் நிறுவன நாள் விழாவில் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி